# என் ஆன்மா இறைவனையே

என் ஆன்மா இறைவனையே
ஏற்றி போற்றி மகிழ்கின்றது
என் மீட்பராம் கடவுளை நினைக்கின்றது (2)

தாழ்நிலை இருந்த தம் அடியவரைத்
தயையுடன் கடைக்கண் நோக்கினார் (2)
இந்நாள் முதலாம் தலைமுறைகள் (2)
எனைப் பேருடையாள் என்றிடுமே

என் ஆன்மா இறைவனையே
ஏற்றி போற்றி மகிழ்கின்றது
என் மீட்பராம் கடவுளை நினைக்கின்றது

ஏனெனில் வல்லமை மிகுந்தவரே
எனக்கரும் செயல்பல புரிந்துள்ளார் (2)
அவர் தம் பெயரும் புனிதமாகும் (2)
அவரில் அஞ்சுவோர்க்கு இரக்கமாகும்

என் ஆன்மா இறைவனையே
ஏற்றி போற்றி மகிழ்கின்றது
என் மீட்பராம் கடவுளை நினைக்கின்றது (2)